# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண் 58/2022**

பெயர்:**பாலு** நாள்: 29.08.2025

வா.சா.1 – 1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – பாலு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 1:25

கிரய உடன்படிக்கை ஒப்பந்தப்பத்திரம் பதிவு செய்யாத பத்திரம் என்றால், சரிதான். அசல் பத்திரம் ஒன்றை மட்டும் தயாரித்தேனா என்றால், ஆமாம். அசல் பத்திரத்தை யார் வைத்திருக்கிறார்கள் என்றால், நான் வைத்திருக்கிறேன். அசல் பத்திரத்தின் நகலை முதலாம் பிரதிவாதி எடுத்துக்கொண்டாரா என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் அசல் பத்திரத்தின் நகல் என்றால், சரிதான். அந்த நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரத்தின் இரண்டாவது பக்கம் மற்றும் மூன்றாவது பக்கத்தின் நிறம் வேறு வேறாக உள்ளது என்றால், பிரதிவாதிதான் பத்திரம் தயாரித்து வந்தார் நான் அதைப் பார்க்கவில்லை. சர்வே எண். 4/2H ன் மொத்த விஸ்தீரணம் 17 செண்ட் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது, அதில் நான் 2½ செண்ட் நிலம் மட்டும் வாங்கியுள்ளேன். சர்வே எண் 4/2I ன் மொத்த விஸ்தீரணம் 6 செண்ட் என்றால், சரிதான் அதில் நான் 2 செண்ட் நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளேன், 2 சர்வே எண்களையும் சேர்த்து மொத்தம் 4 ½ செண்ட் நிலம் வாங்கியுள்ளேன். கிரய ஒப்பந்த பத்திரத்தின் படி நான் வாங்கிய சொத்தும் 2-ம் பிரதிவாதி வாங்கிய சொத்தும் வேறுவேறு சொத்து என்றால், சரியல்ல, இரண்டு சொத்துக்களும் ஒரே சொத்துதான். நான் வாங்கிய சொத்தின் செக்கு பந்தி விவரங்களும் இரண்டாம் பிரதிவாதி வாங்கிய சொத்தின் செக்கு பந்தி விவரங்களும் வேறு வேறு என்றால், சரியல்ல. நான் ஏற்படுத்திய கிரய ஒப்பந்தத்தின் சொத்தின் விஸ்தீரணமும் இரண்டாம் பிரதிவாதி வாங்கிய சொத்தின் விஸ்தீரணமும் வேறுவேறு என்றால், சரியல்ல. 2-ம் பிரதிவாதியின் சொத்தில் நான் பற்றுகை கோர இயலாது என்றால், சரியல்ல. கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திய தேதியிலிருந்து 9 மாதத்திற்குள் நான் கிரயம் செய்திருக்கவேண்டும் என்றால், சரிதான்,

நான் 1-ம் பிரதிவாதியிடம் கிரயம் செய்துகொடுக்கவும், நிலத்தை அளந்து கொடுக்கவும் பலமுறை கேட்டும் அவர் காலம் தாழ்த்தி வந்தார். நான் 29 மாதங்கள் கழித்து வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பியுள்ளேன் என்றால், சரிதான், 2-ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்துகொடுத்த விவரம் தெரிந்த பின்புதான் அறிவிப்பை அனுப்பினேன். 07.11.2019 தேதிக்குள் நான் கிரயம் செய்துகொள்ள முன்வராத காரணத்தினால், இந்த கிரய ஒப்பந்த பத்திரத்தின்படி கொடுத்த முன்பணத்தை திருப்பி கோரமுடியாது என்றால், சரியல்ல. 1-ம் பிரதிவாதியின் அவசரத்தேவைக்காக தான் என்னிடம் நிலத்தை விற்பதற்காக முன்வந்தார் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் உரிய காலத்திற்குள் கிரயம் செய்துகொள்ளாததால் 1-ம் பிரதிவாதி சொற்ப தொகைக்கு நிலத்தை 2-ம் பிரதிவாதிக்கு விற்று விட்டார் என்றால், சரியல்ல 1-ம் பிரதிவாதியின் அண்ணன் மகன் 2-ம் பிரதிவாதிக்கு அதிக விலைக்கு விற்றுவிட்டார். நான் கிரயம் செய்துகொள்ள தயாராக இருந்திருந்தால் 07.11.2019 ற்குள் வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பியிருப்பேன் என்றால், சரியல்ல. கிரய ஒப்பந்தப்படி நான் கொடுத்த முன்பணத்திற்கு எந்தஒரு வட்டியும் கோர இயலாது என்றால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 1:50</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கைியெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.08.29 17:21:34 +1000

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.